செ.வெ.எண்: 49 நாள்: 25.08.2021

**நாகப்பட்டினம் அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் (ஐடிஐ) நேரடி மாணவர் சேர்க்கை 15.09.2021 வரை நீட்டிப்பு என மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ், இ.ஆ.ப. அவர்கள் தகவல்.**

நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள நாகப்பட்டினம், திருக்குவளை மற்றும் செம்போடை அரசு தொழிற் பயிற்சி நிலையங்களில் உள்ள காலியிடங்களை நிரப்புவதற்காக நேரடிச் சேர்க்கை வருகிற 15.09.2021 வரை கால நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது. பயிற்சியில் சேர விரும்புவோர் அசல் கல்விச் சான்றிதழ்கள் மற்றும் பாஸ்போர்ட் அளவு புகைப்படத்துடன் மேற்கண்ட அரசு தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு நேரில் வந்து விண்ணப்பிக்கலாம். அரசு ஐடிஐ-களில் பயிலும் மாணவர்கள் அனைவருக்கும் மாத உதவித் தொகை ரூ.750 உடன் பாடப்புத்தகங்கள், வரைபட கருவிகள், மடிக்கணினி, மிதிவண்டி, சீருடைகள், காலனி மற்றும் இலவச பஸ்பாஸ் ஆகியவை தமிழக அரசால் வழங்கப்படும். மேலும் அரசு ஐடிஐ-களில் பயிலும் மாணவர்களுக்கு மத்திய மாநில அரசு மற்றும் முன்னனி தனியார் நிறுவனங்களில் அதிக வேலை வாய்ப்பு உள்ளது. எனவே மாணவ மாணவிகள் நாகப்பட்டினம், திருக்குவளை மற்றும் செம்போடை அரசு தொழிற்பயிற்சி நிலையத்தினை உடனடியாக அணுகி தொழிற்பயிற்சி நிலையத்தில் பயிற்சியில் சேர்ந்து பயன்பெறலாம். மேலும் விவரங்களுக்கு 04365-250129 தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**